OS 58/2020

பி.வா.சா. 3 தட்சிணாமூர்த்தி த/பெ முருகேசன்

நாள் 18.02.2026

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாய வேலை செய்கிறேன். எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் ஆகாரத்தில் இருக்கிறேன். 1ம் பிரதிவாதி என் மாமனார், 2ம் பிரதிவாதி என் மனைவி. நாங்களும் எனது மாமனாரும் ஒரே ஊரில் இருக்கிறோம். தனித்தனியாக வசித்து வருகிறோம். வாதி நீலகண்டன் எனது மனைவியின் தம்பி ஆவார். வழக்கு சொத்து நான் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான். யாரிடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் 4ம் பிரதிவாதி இளங்கோவிடம் இருந்து கிரையம் வாங்கினேன். என்னுடைய அனுபவத்தில் தான் சொத்து இருக்கிறது என்றால் சரிதான். வாதியின் குடும்ப சொத்துகளை விற்பனை செய்து தாவா சொத்து வாங்கப்பட்டது என்றால் இல்லை எனது மாமனாரின் சுயசம்பாத்திய சொத்து ஆகும். வாதி நீலகண்டனும் 1ம் பிரதிவாதியும் ஒன்றாக இருக்கிறார்களா என்றால் 2003ல் வாதி வெளியே சென்றுவிட்டார் அதன் பிறகு தனித்தனியாக இருந்தார்கள். நான் தான் எனது மாமனாரை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். அவர்களுக்கான மருத்துவ செலவுகளையும் நான் தான் பார்த்து வருகிறேன். வாதி எங்கு இருக்கிறார் என்றால் சென்னையில் இருக்கிறார், ஊரில் இல்லை. வழக்கு சொத்தை எனது மாமனார் 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார். 4ம் பிரதிவாதியிடம் இருந்து நான் வாங்கியிருக்கிறேன்.